திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் செவ்வாபேட்டை பகுதியில் ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த் தலைமையில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி கூறி உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபட்டார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., கே.ஜெ.ரமேஷ், ஜி.விமல் வர்ஷன், ஞா.ரமேஷ், மு.ராஜா, பக்தவச்சலம், ஆர்.திலீப்ராஜ், கசுவ ஆர்.ராஜ், உதயகுமார் வழக்கறிஞர் வ.ஹரி, அன்பு, ராமானுஜம், பி.சரவணன், செல்வி, சௌந்தரராஜன், ஸ்டெல்லா , டெசி ராணி அன்பு, ஐ.சி.எப். ரவி, சுந்தர்ராஜ், ஆதிகேசவன், சுரேஷ் பாபு, பாலாஜி, பார்த்திபன் ராஜசேகர், ஆதவன் , சிவா, சதீஷ், தங்கதுரை , மேரி, உள்பட பலர் உள்ளனர்.

# தஞ்சை மாவட்டம், மானம்பாடியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டமுகாம்!

தஞ்சை, ஜூலை 18- முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள மானம்பாடி ஊராட்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா. பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மு.நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், துணை மேயர் சுப.தமிழழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ். விஜயன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் ஜெ.சுதாகர், சுந்தரஜெயபால், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஜி.கே.எம்.ராஜா, டி.ஆர்.அனந்தராமன், எஸ். முருகன், சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை ஆட்சியர் பெ.மணிமாறன், திருவிடைமருதூர் வட்டாட்சியர் ஆர்.சாந்தமீனா, கும்பகோணம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரா.இராசன், எஸ்.சாமிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதியில் உள்ள பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் கீழ்கால்பட்டடை முதல் வெளியகரம் கிராமம் வரை முதலமைச்சர் மேம்பாட்டு சாலை திட்டத்தின் கீழ் ரூபாய் 29 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி.ஜே.சீனிவாசன், சி.ஜே.செந்தில்குமார், நிர்வாகிகள் திருமலை லோகநாதன், பி.ரவீந்திரநாத், எஸ்.மணிமேகலை, ஏ.கே.ரவி, டி.செங்கையா, எஸ்.ஏ.கலில் உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறையில் - விடுதலைப் போராட்ட

# தியாகி நாகப்பப் படையாட்சியாருக்கு சிலை!

## முதல்வருக்கு பொன்குமார் நன்றி – பாராட்டு!

சென்னை, ஜூலை 18-

காந்தியடிகளுக்கு இந்திய விடுதலை போராட்டத்தில் ஊக்கமளித்த தியாகி நாகப்பப் படையாட்சியாருக்கு மயிலாடுதுறையில் முழு உருவ வெண்கல சிலை அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பொன்குமார் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு காந்தியடிகளுக்கு ஊக்கமளித்த மயிலாடுதுறை தியாகி நாகப்பப் படையாட்சியார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் முழு திருவுருவ சிலை நிறுவப்படும் என்று அறிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய விடுதலைக்குக் காரணமான சத்தியாக்கிரகப் போராட்டத்தை காந்தியடிகள் வடிவமைத்து அதை முதன் முதலில் செயல்படுத்தியது தென்னாப்பிரிக்கா நாட்டில் தான். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முதலில் களப் பலியானவர் நாகப்பன் படையாட்சி ஆவார்.

மயிலாடுதுறை மாவட்டம், மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் சாமிகண்ணு படையாட்சி கனகம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்த நாகப்பன் படையாட்சி, 1850 ஆம் ஆண்டு வாக்கில் தன் பெற்றோருடன் தொழிலுக்காக தென்னாப்பிரிக்கா சென்றார்.

தென்னாப்பிக்காவில் அதிகாரத்தில் இருந்த ஆங்கிலேயே வெள்ளையர்கள் அந்த நாட்டின் பூர்வீக குடிமக்களான கருப்பினத்தவரையும் அங்கு குடியேறிய இந்தியர்களையும் இரண்டாந்தர குடி மக்களாக நடத்தி வந்தார்கள்.

ஒவ்வொரு இந்தியரும் தங்களுடைய அங்க அடையாளங்களையும் கை ரேகைகளையும் பதிவு செய்ய வேண்டும், இந்தியத் தொழிலாளர்கள் தென்னாப்பிரிக்காவில் பணிபுரிய 25 பவுண்டு வரி செலுத்திட வேண்டும் என்பன போன்ற பல கடும் சட்டங்கள் போடப்பட்டன.

வழக்கறிஞர் தொழிலுக்காக தென்னாப்பிரிக்கா சென்றிருந்த காந்தி அவர்கள் இந்தியர்கள் மீது வெள்ளையர்கள் தொடுத்த இந்தத் தாக்குதலை எதிர்த்து போராடி வந்தார்.

இந்த சமயத்தில் நாகப்பன் அவர்களது நண்பரான திருவாரூர் பாலசுந்தரத்தை அவரது ஆங்கிலேயே முதலாளி தாக்கி, இரண்டு பற்களை உடைத்து விட்டார். இதனை அறிந்து நாகப்பன் பாலசுந்தரத்தை காந்தியிடம் அழைத்துச் சென்றார். அந்த முரட்டு ஆங்கிலேயருக்கு எதிராக காந்தி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கிற்கு முக்கிய சாட்சியாக நாகப்பன் இருந்தார். இந்த வழக்கு வெற்றி பெற்றது. ஆங்கிலேயருக்கு எதிரான இந்த வழக்கின் வெற்றி தென்ஆப்பிரிக்காவில் இந்திய தொழிலாளர்களிடம் பெரும் புரட்சி ஏற்படுத்தியது. இந்த செய்தி இந்தியாவிலும் பரவியது.

இது இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமளித்தது.

**சூடு பிடிக்கத் தொடங்கியது!**

மேற்படி கொடுமைகளுக்கு எதிராக காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரக போராட்டத்தை ஆரம்பித்தார். இந்த போராட்டத்தில் அங்கிருந்த ஏராளமான தமிழர்களும் பங்கேற்றனர். போராட்ட களத்தில் முன்கள வீரராக செயல்பட்ட 18 வயதான நாகப்பன் படையாட்சி 21.06.1909 அன்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த போராட்டத்தை கண்டு ஆங்கிலேயர்கள் அஞ்சினர். அதனால் இந்தியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 25 பவுண்டு வரி, மூன்று பவுண்டாக குறைக்கப்பட்டது. இதனால் இந்தியாவில் விடுதலை போராட்டம் எழுச்சி பெற்று சூடு பிடிக்கத் தொடங்கியது.

போராட்டக் களத்தில் நாகப்பன் தீவிரமாக இருந்ததால் தென்னாப்பிரிக்க நாட்டு அதிகாரிகள் சிறையில் அவரை மிகவும் கடுமையாக நடத்தினார்கள். இதனால் உடல் நலன் பாதிக்கப்பட்டது. வெளியில் வந்த நாகப்பன் உடல் நிலை மேலும் மோசம் அடைந்தது. 06.07.1909 அன்று இறந்து போனார்.

இது பற்றி காந்தியடிகள் தாம் நடத்தி வந்த 'இந்தியன் ஒபினியன்' என்ற பத்திரிக்கையில் நாகப்பனின் மரணம் சட்டப்படியான படுகொலை, அந்த வீர இளைஞன் இல்லாது போயிருந்தால் நமது சத்தியாகிரகப் போராட்டம் வெற்றிப் பாதையில் போயிருக்காது என்று எழுதினார்.

கடந்த ஆண்டு தியாகி நாகப்பப் படையாட்சியார் அவர்களின் நினைவு நாளான ஜூலை 6 ஆம் தேதி மயிலாடுதுறையில் சுமார் 2000 பேர் கலந்து கொண்ட பேரணி மூலம் மயிலாடுதுறையில் உள்ள அவரது சிறிய அளவிலான திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் சமூகநீதி சத்திரியர் பேரவையின் சார்பில் நாகப்பப் படையாட்சியார் அவர்களின் புகழஞ்சலி கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டு நாகப்பப் படையாட்சியார் அவர்களின் புகழை பாடினர். அதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக காந்தியடிகளுக்கு இந்திய விடுதலை போராட்டத்தில் ஊக்கமளித்த தியாகி நாகப்பப் படையாட்சியாருக்கு மயிலாடுதுறையில் முழு உருவ வெண்கல சிலையை அமைத்திட வேண்டும் எனவும், மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்திற்கு நாகப்பப் படையாட்சியாருக்குபெயர் சூட்ட வேண்டும் எனவும், நாகப்பப் படையாட்சியாருடைய வரலாற்றை அடுத்த தலைமுறை அறிந்து கொள்ளும் வகையில் பள்ளி பாடப்புத்தகத்தில் அவருடைய வரலாறு இடம்பெற செய்திட வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை வைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் முதல்வரை நேரில் சந்தித்து இந்த கோரிக்கைகளை வலியுறுத்தினோம்.

**பாராட்டுதலுக்கும் வரவேற்புக்குமுரியது!**

அதன் அடிப்படையில் இன்றைக்கு அவருக்கு முழு உருவ சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளது பாராட்டுதலுக்கும், வரவேற்புக்கும் உரியதாகும். ஏற்கனவே கடலூரில் தியாகி அஞ்சலை அம்மாளுக்கு சிலை வைத்து அவருக்கு அரசு விழா எடுக்க முதல்வர் அறிவித்துள்ளார்.

இட ஒதுக்கீடு தியாகிகளுக்கு நினைவு மண்டபம், ஏ.கோவிந்த சாமி அவர்களுக்கு நினைவு மண்டபம் என தொடர்ந்து பல்வேறு அறிவிப்புகளை செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் இப்போது நாகப்பப் படையாட்சி அவர்களுக்கு முழு உருவச் சிலை நிருவப்படும் என அறிவுறுத்தியுள்ளார். முதல் வருக்கு சமூகநீதி சத்திரியர் பேரவை நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் அறிவுறுத்தலின் பேரில் பாகம் 309 தில் சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன் கலந்து கொண்டு வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்த்தனர்.

நம் மண், மொழி, மானம் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" எனும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் முன்னெடுப்பை முன்னிட்டு 88 வது வார்டில் சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளரும், மாமன்ற உறுப்பினர் ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் தனது வாகனத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற வாசக ஸ்டிக்கரை ஒட்டி தனது வார்டில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

### பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில்

# பெரம்பலூர் மாவட்டத்தில் 3 புதிய வழித்தடங்களில் பேருந்து சேவைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து – பேருந்தில் பயணித்தார்!

பெரம்பலூர், ஜூலை 18 -

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அரியலூர் முதல் சென்னை வரை புதிய வழித்தடத்திலான பேருந்து சேவையினை வயலப்பாடியிலிருந்தும், குன்னம் முதல் சென்னை வரை புதிய வழித்தடத்திலான பேருந்து சேவையினை வேப்பூரிலிருந்தும், விடியல் பயணம் திட்டத்தின் கீழ் லெப்பைக்குடிகாடு முதல் பெரம்பலூர் வரை மகளிர்களுக்கான இலவச பேருந்து பயண சேவையினை லெப்பைக்குடிக்காடு சந்தைத் திடல் பகுதியிலிருந்தும் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கின்றார். நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களைப் பார்த்து அண்டை மாநிலங்களும், வெளிநாடுகளும் செயல்படுத்தி வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். தமிழ் நாட்டுப் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச்செய்யும் உயர்ந்த நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான விடியல் பேருந்து பயண திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள். ஏழை எளிய மக்களின் போக்குவரத்து செலவினை குறைக்கும் வகையில் நமது மாநிலத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது.

அதனடிப்படையில், அரியலூர் முதல் வேப்பூர், வயலப்பாடி, லெப்பைக்குடிக்காடு வழியாக சென்னை மாதவரம் வரை செல்லும் வகையில் புதிய வழித்தடத்திலான பேருந்து சேவை, குன்னம் முதல் நமங்குணம், வயலப்பாடி, வேள்விமங்கலம், அங்கனூர், அகரம் சீகூர் வழியாக சென்னை மாதவரம் செல்லும் வகையில் புதிய வழித்தடத்திலான பேருந்து சேவை, விடியல் பயணம் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் முதல் வாலிகண்டபுரம் சின்னாறு தொழுதூர் வழியாக லப்பைக்குடிக்காடு வரை செல்லும் மகளிர்களுக்கான இலவச பேருந்து பயண சேவை என மூன்று வழித்தடங்களுக்கும் புதிய பேருந்து சேவை இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கும்பகோணம் துணை மேலாளர் (தொழில்நுட்பம்) புகழேந்தி ராஜ், கோட்ட மேலாளர் ராம்குமார்,

ஒன்றிய கழக செயலாளர்கள் தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு.நீல மேகம், பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர் உசேன், அயலக அணி மாவட்ட அமைப்பாளர் எ.ரசூல்அகமது மற்றும் கிளை மேலாளர்கள், போக்குவரத்துத்துறை பணியாளர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வில்லியனூர் சிவ கணபதி நகரில்

# ரூ.10 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணி!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, ஜூலை 18-

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி சிவகணபதி நகருக்கு உட்பட்ட ராகவேந்திரா நகரில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூ.9 லட்சத்து 93 ஆயிரம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடந்தது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா கலந்து கொண்டு, சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் வேதாசலம், சதாசிவம், சம்பங்கி, சசிகுமார், ஏழுமலை, கிருஷ்ணமூர்த்தி, இளங்,கோ, குமார், ராவ், ராஜேந்திரன், விஸ்வநாதன், காசிநாதன், சக்திவேல்,

முருகையன், சங்கர், வெங்கட், அந்துவான், புஷ்பராஜ் மற்றும் தி.மு.க. சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சரவணன், விவசாய அணி துணை அமைப்பாளர் கோபி, ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், தொகுதி துணைச் செயலாளர் ஹரிகிருஷ்ணன், தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், கிளைக் கழக நிர்வாகிகள் சபரிநாதன், ராஜி, மிலிட்டரி முருகன், சேகர், கலைமணி, சரவணன், முருகேசன், பாலமுருகன், ராஜேந்திரன், பாலு, பாலகுரு, கமால் பாஷா, ராமஜெயம், சந்துரு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அம்பத்தூர் தொகுதி 79, 80 வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்!

## ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை 18 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி அவர்களின் ஆணைக்கினங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுருத்தலின்படி இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஆலோசனையின்படி அன்பு தளபதி அவர்கள் ஜூலை 15 அன்று தொடங்கி வைத்த "உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப் சாமுவேல் MLA அவர்கள் தலைமையில் வட்டம் 79யில் 16.07.2025 பி.டி.ஆர் திருமண மண்டபத்திலும் மற்றும் 17.07.2025 அன்று வட்டம் 80யில் மல்லிகா மஹாலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த முகாமில் கலைஞர் மகளீர் உரிமைத்தொகை உள்ளிட்ட 15 அரசுத் துறைகளின் கீழ் உள்ள 46 சேவைகளுக்காக பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்து அதனை ஆய்வு செய்யப்பட்டு 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

மேலும் இதில் அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, 7வது மண்டல குழு ஆனையர், தெற்கு பகுதி கழக செயலாளரும் மாமன்ற துணை தலைவருமான டி.எஸ்.பி. இராஜகோபால் மரு.அணி.அமை ஜி.சாந்தகுமாரி மற்றும் அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு அ.செல்வம் க.கதீஜா, மா. ரமேஷ், வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள் வி. ரவீந்திரன் வெ.இராதா கிருஷ்ணன் மு.இரகு மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி மற்றும் 15 அரசுத் துறை சார்ந்த அதிகாரிகள், அம்பத்தூர் வடக்கு பகுதி வார்டு 79 மற்றும் வார்டு 80 உட்பட்ட பகுதி தலைமை கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பொதுமக்கள் திறளாக முகாமில் கலந்து கொண்டார்கள்.

அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் வட்டம் 79 ல் 16.07.2025 பி.டி.ஆர் திருமண மண்டபத்திலும் மற்றும் 17.07.2025 அன்று வட்டம் 80 ல் மல்லிகா மஹாலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த முகாமில் கலைஞர் மகளீர் உரிமைத்தொகை உள்ளிட்ட 15 அரசுத் துறைகளின் கீழ் உள்ள 46 சேவைகளுக்காக பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்து அதனை ஆய்வு செய்யப்பட்டு 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என உறுதியளிக்கப்பட்டது. மேலும் இதில் மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி., ஜி.சாந்தகுமாரி, க.முரளிபாபு , அ.செல்வம் க.கதீஜா, மா.ரமேஷ், வி.ரவீந்திரன் வெ.இராதாகிருஷ்ணன் மற்றும்பலர் கலந்து கொண்டனர்.